# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2015. 12. 14 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்)

**இலங்கையில் உளதாயிருந்த ஆயுதந்தாங்கிய பயங்கரவாதக் குழுவொன்றின் செயற்பாடுகள் காரணமாக நீதிமன்றத்தில் தமது உரிமைகளைத் தொடருவதற்கு அல்லது தம்மைப் பாதுகாத்து கொள்வதற்கு இயலாதிருக்கின்ற ஆட்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேட சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்கள் ஆகியவற்றை இயலச் செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

ச.வ.ஓ. 21 /2010

**இலங்கையில் உளதாயிருந்த ஆயுதந்தாங்கிய பயங்கரவாதக் குழுவொன்றின் செயற்பாடுகள் காரணமாக நீதிமன்றத்தில் தமது உரிமைகளைத் தொடருவதற்கு அல்லது தம்மைப் பாதுகாத்து கொள்வதற்கு இயலாதிருக்கின்ற ஆட்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேட சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்கள் ஆகியவற்றை இயலச் செய்வதற்குமானதொரு சட்டம்**

*முன்னுரை.*

குறித்த சில ஆட்கள் அனுகூலம் குறைந்த ஆட்களாக இருந்து வந்துள்ளதாதலாலும் அத்துடன் ஆகவே 1983 மே 1 ஆந் தேதியன்று தொடங்கி 2009 மே 18 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின் போது ஆயுதந்தாங்கிய பயங்கரவாதக் குழுவின் செயற்பாடுகள் காரணமாக காணி உட்பட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை மீளப்பெறுவதற்காக நீதிமன்றத்தில் தமது உரிமை களைத் தொடருவதற்கு இயலாதவராக இருக்கின்றனராதலாலும்:

அத்துடன் தற்பொழுது நீதிமன்றத்தில் தமது உரிமைகளைத் தொடருவதற்கு அத்தகைய ஆட்களை இயலச் செய்வதற்கான விசேட சட்ட ஏற்பாடுகளை சட்டமாக்குவதற்கு அவசியமாக வந்துள்ளதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர் .*

**1.** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*அனுகூலம் குறைந்த ஆளொருவரின் காணி உட்பட அசையா ஆதனத்திற்கு வழக்குத் தொடுப்பதற் கான உரிமை.*

**2.** (1) காணி உட்பட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தினை மீளப் பெறுவதற்கென வழக்குத் தொடுப்பதற்கு எவரேனும் ஆளின் உரிமை எழுந்துள்ளபோது, எந்நேரத்திலும் அத்தகைய ஆள் அனுகூலம் குறைந்த ஆளொருவராக இருந்தால், வேறு எவரேனும் ஆளினால் காணி உட்பட மேற்சொல்லப்பட்ட அசையா ஆதனத்தின் உடைமை முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆள் அனுகூலம் குறைந்த ஆளொருவராக இருந்திருந்த காலம் வரை

அத்தகைய உடைமையின் பயனைக் கொண்டு காணி உட்பட அத்தகைய அசையா ஆதனத்திற்கு (68 ஆம் அத்தியாயமான) ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உரித்துடைமையை அத்தகைய வேறு ஆளிற்கு வழங்குவதாகக் கருதப்படுதலாகாது.

எடுத்துக்காட்டு

> 'B' என்பவர் 'A' யினுடைய காணியில் உடைமையைத் தொடங்கும் நேரத்தில் 'A' என்பவர் அனுகூலம் குறைந்த ஆள் ஒருவர் ஆவார். 'A' என்பவர் அனுகூலம் குறைந்த ஆள் ஒருவராகத் தொடர்ந்திருக்கும் வரை 'A' என்பவருக்கு எதிராக ஆட்சியுரிமை தொடங்க மாட்டாது.

(2) (68 ஆம் அத்தியாயமான) ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், எவரேனும் உரிமை கோருகின்ற ஆளினால் அல்லது அவர், எவர்களின்கீழ் உரிமை கோருகின்றாரோ அவர்களினால், காணி உட்பட ஏதேனும் அசையா ஆதனத்தின் முப்பது வருடங்களுக்குப் பாதகமான மற்றும் தொடர்ச்சியான உடைமை, எவ்வாளுக்கு எதிராக அப்பாதகமான மற்றும் தொடர்ச்சியான உடைமை கோரப்படுகின்றதோ அவ்வாள் அனுகூலம் குறைந்த ஆள் ஒருவராக இருக்குமிடத்து (68 ஆம் அத்தியாயமான) ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலான உரித்திற்கான முடிவான எண்பிப்பாகக் கருதப்படுதலாகாது.

ஐயத்தைத் தவிர்த்தல்.

**3.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அனுகூலம் குறைந்த ஆள் ஒருவர் இறந்திருப்பின், எந்தக் காலப்பகுதியின்போது அவர் அவ்வாறு அனுகூலம் குறைந்தவராகவிருந்தாரோ அந்தக் காலப்பகுதி, அவருடைய மரபுரிமையாளர் அல்லது மரபுரிமையாளர்களின் நன்மைக்கென பழக்கப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய மரபுரிமையாளர் அல்லது மரபுரிமையாளர்கள் இச்சட்டத்தின் 2 ஆம் உட்பிரிவின்கீழ் அனுகூலம் குறைந்த ஆள் ஒருவருக்கு வழங்கப்பட்ட நன்மைகளிற்கு உரித்துள்ளவர்களாதலும் வேண்டும்.

**4**. காணி உட்பட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை மீளப் பெறுவதற்காக அவருடைய உரிமைகளைத் தொடருவதற்கு இயலாதவராக இருந்தவரான அனுகூலம் குறைந்த ஆளொருவர் இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததற்குப் பின்னர் பன்னிரெண்டு மாதங்களினுள் இச்சட்டத்தினால் அளிக்கப்பட்ட நன்மைகளைப் பயன்படுத்துவதற்கு அவர் வழக்கொன்றைத் தொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

*அனுகூலம் குறைந்த ஆளொருவர் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியின் பின்னர் பன்னிரெண்டு மாதங்கள் வரை இச்சட்டத்திலிருந்தான நன்மைகளுக்கு உரித்துடையவராதல்.*

**5**. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம், 1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காணி அளிப்பு (சிறப்பேற்பாடுகள்) சட்டம் அல்லது (454ஆம் அத்தியாயமான) அரச காணிகள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் காணிக்கு அல்லது அது தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

*சட்டத்தின் ஏற்பாடுகள் அரச காணிகளுக்கு ஏற்புடையதாகாமை.*

**6**. இச்சட்டத்தில் -

*பொருள் கோடல்.*

"ஏதேனும் ஆயுதம் தாங்கிய பயங்கரவாதக் குழுவொன்றின் செயற்பாடுகள்" என்பது, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தில், "பயங்கரவாதச் செயல்" ஒன்றாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் செயல் எனப் பொருளாகும் ;

"அனுகூலம் குறைந்த ஆள்" என்பது, 1983 மே 1 ஆந் தேதியன்று தொடங்கி 2009 மே 18 ஆம் தேதியில் முடிவடைந்த காலப்பகுதியின் போது ஏதேனும் ஆயுதந்தாங்கிய பயங்கரவாதக் குழுவொன்றின் செயற்பாடுகள் காரணமாக நிலவிய சூழ்நிலைகளின் விளைவாக எந்த ஆள், அவருடைய உரிமைகளை எந்த நீதிமன்றத்தில் தொடருவதற்கு அவர் சட்டத்தினால் தேவைப்படுத்தப் பட்டிருந்தாரோ அந்த நீதிமன்றம் ஒன்றில் தனது உரிமைகளைத் தொடருவதற்கு இயலாதவராக இருந்தவரான அந்த ஆள் ஒருவர் எனப் பொருள்படும்.

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*